செ.வெ. எண்: 311 நாள்: 25.05.2012

## பத்திரிக்கைச் செய்தி

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான மாவட்ட மாறுதல் கலந்தாய்வு

2012–2013–ஆம் கல்வி ஆண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பணிபுரியும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் / உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் / முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் கலந்தாய்வுகள் மற்றும் இடைநிலை ஆசிரியர் / காப்பாளர், பட்டதாரி ஆசிரியர் / காப்பாளர் மற்றும் சிறப்பு ஆசிரியர்களுக்கான மாவட்ட மாறுதல்களும் சென்னை–5 ஆதிதிராவிடர் நல ஆணையர் அலுவலகக் கூட்ட அரங்கில் கீழ்க்குறிப்பிட்டுள்ள அட்டவணைப்படி நடை பெறவுள்ளது.

30.05.2012 முற்பகல் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான மாறுதல்களும், அன்று பிற்பகல் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான மாறுதல்களும், 01.06.2012 அன்று முற்பகல் தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான மாறுதல்களும், அன்று பிற்பகல் உயிரியல், தாவரவியல், விலங்கியல் மற்றும் இதர பாட முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான மாறுதல்களும் கலந்தாய்வு மூலம் வழங்கப்படும். 08.06.2012 முற்பகல் இடைநிலை ஆசிரியர்/ காப்பாளர், சிறப்பு ஆசிரியர்களுக்கான மாவட்ட மாறுதல் கலந்தாய்வும் அன்று பிற்பகல் பட்டதாரி ஆசிரியர்/காப்பாளர்களுக்கான மாவட்ட மாறுதல் கலந்தாய்வும் நடைபெறும்.

ஒம்/–பொ.சிவசங்கரன்,
ஆதிதிராவிடர் நல ஆணையர்.

**வெளியீடு: –**

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.